[2021] 1 எஸ்.சி.ஆர். 478

கஜானன் பாபுலால் பன்சோட் மற்றும் பலர்

-எதிர்-

மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண்.104/2021)

பிப்ரவரி 05, 2021

மாண்புமிகு நீதியரசர் திரு.எல்.நாகேஸ்வர ராவ்,

மாண்புமிகு நீதியரசர் செல்வி. இந்து மல்ஹோத்ரா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. வினீத் சரண்

பணிச்சட்டம் - தெரிவு - காவல்துறை துணை ஆய்வாளர் பணியிடம் - மகாராஷ்டிரா அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (ம.பொ.தே) எந்த ஆலோசனையும் அல்லது முன் ஒப்புதலின்றி எதிர்ப்புக்குள்ளான அரசு தீர்மானத்தை மகாராஷ்டிரா மாநில அரசு வெளியிட்டுள்ளது - வரையறுக்கப்பட்ட துறைசார் போட்டித் தேர்வுக்கு (வ.து.போ.தே) அறிவிக்கப்பட்ட காலியிட எண்ணிக்கையை விட இருமடங்கு நிரப்ப எதிர்ப்புக்குள்ளான அரசு தீர்மானம் கோரப்பட்டுள்ளது - எதிர்ப்புக்குள்ளான அரசு தீர்மானம் உள்ள கொள்கை முடிவை எதிர்த்து முதலேற்பு

விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டது - மகாராஷ்டிரா நிர்வாகத் தீர்ப்பாயம் இடைக்கால தடை உத்தரவின் மூலம், அரசு தீர்மானத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலுடன் இணைக்கப்பட்ட 636 கூடுதல் பணியாளர்கள் தொடர்பாக தற்போதைய நிலையைப் பராமரிக்க உத்தரவிட்டது - முடிவு : அறிவிக்கப்பட்ட காலி பணியிடங்களை விட கூடுதலாக நபர்கள் நியமனம் செய்யப்படுவது அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 14 மற்றும் 16 (1)-ஐ மீறுவதாகும் என்பதால் விளம்பரப்படுத்தப்பட்ட அறிவிக்கப்பட்ட காலியிடத்தை விட கூடுதலானவற்றை நிரப்ப முடியாது என்பது பணிக்கான சட்டவியலில் நன்கு அமைந்த ஒன்றாகும் - இரு விண்ணப்பதாரர் தேர்வில் கலந்து கொண்டு ஆனால் தகுதி பெறத் தவறிவிட்டனர் என்ற காரணத்தினால் தீர்ப்பாயம் தற்போதைய நிலை என்ற உத்தரவை நீக்கி விட்டது - மொத்தமாக 636 கூடுதல் விண்ணப்பதாரர்கள் காவல்துறை துணை ஆய்வாளர்களாக, மனுதாரர்களுக்கு மேலே நியமிக்கப்படவிருப்பதால் விண்ணப்பதாரர்கள்/மனுதாரர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படும், ஏனென்றால் இது இடைக்கால தடை உத்தரவை விடுவிக்க நியாயமான காரணமாக இராது - விண்ணப்பதாரர்கள் அரசு தீர்மானத்தை எதிர்க்கவில்லை என்ற மற்றொரு காரணத்தினாலும் தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவை நீக்கியுள்ளது - இது ஒரு தவறான கருத்து என்பது முதலேற்பு விண்ணப்பத்தில் உள்ள கோரிக்கையிலிருந்தே தெளிவாகிறது - அரசு தீர்மானத்தை

எதிர்த்த முதலேற்பு விண்ணப்பங்களில் அந்த வழக்கின் மனுதாரர்கள், மாநில அரசுடன் அவர்களது கூற்றினை தொடர விரும்புவதால், சம்பந்தப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற்றுவிட்டார்கள் என்ற மூன்றாவது காரணத்தினாலும், தீர்ப்பாயம் இடைக்கால தடை உத்தரவை நீக்கறவு செய்தது - அவர்களது சொந்தக்காரணங்களுக்காக மு.வி-களை திரும்பப்பெற மற்ற நபர்கள் தேர்ந்தெடுத்த காரணத்தாலேயே தற்போதைய நிலை என்ற உத்தரவை நீக்கறவு செய்தது நியாயமான காரணமாக இல்லை - தீர்ப்பாயம் முன்பாக நடவடிக்கை நிலுவையில் இருக்கும்போது 9 மாத கால பயிற்சிக்கு கூடுதல் பட்டியலில் உள்ள 636 நபர்களை அனுப்ப உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனுவில் மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது - அத்தகைய உத்தரவை நீ.பே மனுவில் வழங்கியிருக்க கூடாது - தீர்ப்பாயத்தின் முன்பு வழக்கு நடவடிக்கைகள் நிலுவையிலிருக்கும்போது எதிர்ப்புக்குள்ளான அரசு தீர்மானம் தடை செய்யப்பட்டதாகவே இருக்கும் என உத்தரவை உச்சநீதிமன்றம் தற்போது பிறப்பித்துள்ளது - வழக்கு நடவடிக்கைகளில் முன்னிலையாகி அவர்கள் கலந்து கொள்வதை இயல்விக்கும் வகையில் அரசு மூலம் நிலுவையில் உள்ள மு.வி.-ன் அறிவிப்பினை கூடுதல் 636 விண்ணப்பதாரகளுக்கும் அனுப்புவதை உறுதி செய்யும்போது, நிலுவையில் உள்ள மு.வி-ஐ 6 மாதத்திற்குள் தீர்ப்பாயம் முடிவு செய்யவேண்டும் - எதிர்ப்புக்குள்ளான அ.தீ-ஐ எதிர்க்கும் நிலுவையிலுள்ள மு.வி-க்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து இந்த வழக்குகளில்

பொதுவான தீர்ப்பு வழங்கவும் தீர்ப்பாயத்திற்கு மேலும் உத்தரவிடப்பட்டது - காவல்துறை துணை ஆய்வாளர் (பணி நியமன) விதிகள், 1995 - விதி 5 - அரசமைப்புச் சட்டம் - வகுமுறைக்கூறு 320 (3) (a).

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்.104/2021.

அவுரங்காபாத்திலுள்ள பம்பாய் உயர்நீதிமன்ற கிளையின் நீதிப்பேராணை மனு எண்.15045/2019-இல் 06.03.2020 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

வினய் நவாரே, எம்.என்.ராவ், ஆர்.பசந்த், மூத்த வழக்குரைஞர்கள், அஜய் தேஷ்பாண்டே, வினோத் சங்கவிகர், ஆனந்த் திலீப் லாண்ட்கே, எம்.ஒய். தேஷ்முக், செல்வி. ஆயினா வர்மா, ரவீந்திர கேஷவ்ராவ் அட்சூர், சித்தேஸ்வர் நாம்தேவ் பிராதார், யாஷ் பிரசாந்த் சோனவானே, செல்வி. மன்ஜீத் கிர்பால், மனு கிருஷ்ணன், சச்சின் பாட்டீல், ராகுல் சிட்னிஸ், ஆதித்யா ஏ. பாண்டே, ஜியோ ஜோசப் - ஆகியோர் தரப்பினர்களுக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் செல்வி. இந்து மல்ஹோத்ரா அவர்களால் பகரப்பட்டது.

1. காவல்துறை துணை ஆய்வாளர் பணியிடத்திற்கு விண்ணப்பதாரர்களை தேர்வு செய்வதற்காக வரையறுக்கப்பட்ட துறை போட்டித் தேர்வினை (வ.து.போ.தே) நடத்த மகாராஷ்டிரா பொதுப்பணி தேர்வாணையத்திற்கு (ம.பொ.ப.தே) மகாராஷ்டிரா அரசு 02.06.2016-இல் வேண்டுகோள் விடுத்தது.

2. மகாராஷ்டிரா அரசு உள்துறை, தனது அரசு 27.06.2016 நாளிட்ட சுற்றறிக்கையில் காவல்துறை துணை ஆய்வாளர் பணியிட பதவி உயர்வு வ.து.பொ.தே-2016 வழியாக வழங்குவதற்கு 828 காலிப்பணியிடங்களையும் அதில் 642 பொது பிரிவிலும் மற்றும் 186 பல்வேறு ஒதுக்கீடு பிரிவுகளிலும் நிரப்ப அறிவிக்கை வெளியிட்டது.

3. பணித்தேர்வானது, காவல்துறை துணை ஆய்வாளர் (பணி நியமனம்) விதிகள் 1995-ன் வகையங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. சம்பந்தப்பட்ட விதிகள் கீழ்க்காணுமாறு :-

> "**விதி 3** :- மகாராஷ்டிரா மாநில காவல்துறை துணை ஆய்வாளர் பதவிக்கு பணி நியமனம் கீழ்க்கண்டவாறு செய்யப்படவேண்டும் :

(a) ஐந்தாண்டுகளுக்கு மிகாமல் முறையான பணிக்காலம் அல்லது இடைவெளியுடனான 7 ஆண்டு பணிக்காலம் மற்றும் அரசு தீர்மானம் எண்.பி.எஸ்.பி. 0390/சிஆர்-408/பிஓஎல்-5-ஏ நாள் 05.07.1995-இல் பத்தி 5-இல் வகுத்துரைக்கப்பட்டுள்ள விதிகளின்படி, காவல்துறை இயக்குநரால் நடத்தப்பட்ட துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற, காவல்துறையில் ஹவில்தார் மற்றும் உதவி துணை ஆய்வாளர் பதவி வகிக்கும் நபர்களிடமிருந்து உடல் தகுதிக்குட்பட்டு பணிமூப்பின் அடிப்படையில் தகுதியுடைய நபருக்கு பதவி உயர்வு மூலமும்

அல்லது

(b) துணை ஆய்வாளர் பணியிட நியமனத்திற்காக, மகாராஷ்டிரா பொதுப்பணி தேர்வாணை குழுவால் நடத்தப்படும் வரையறுக்கப்பட்ட துறைத்தேர்வின் முடிவின் அடிப்படையில் காவல் படையில் பணியாற்றும் நபர்களை தேர்வு செய்வதன் மூலம், அவ்விண்ணப்பதாரர்களுக்கு -

(i) 35 வயதுக்கு மிகாமலும்;

வரம்புரையாக :- பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 5 ஆண்டுகள் வயது வரம்பு தளர்த்தப்பட வேண்டும் மற்றும் -

வரம்புரையாக :- 01.01.1991-குப் பிறகு வரையறுக்கப்பட்ட துறைதேர்வுவெழுத தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் ஆனால் வயது வரம்பு காரணமாக 1992 மற்றும் 2002-இல் நடைபெற்ற வரையறுக்கப்பட்ட துறைதேர்வெழுத அனுமதிக்கப்படாதோர் அடுத்து வரும் தொடர் தேர்வுகளில் பங்கேற்க மூன்று வாய்ப்புகள் அளிக்கப்படலாம்.

(ii) பின்வரும் கல்வித்தகுதிகளுடன் காவலராக குறைந்தபட்ச முறையான பணியை நிறைவேற்றிருக்க வேண்டும்

குறைந்தபட்ச முறையான பனியின் கல்வித்தகுதி

(1) 4 ஆண்டுகள் -- ஏதேனும் பட்டப்படிப்பு

(2) 5 ஆண்டுகள் -- மேல்நிலைப்பள்ளி படிப்பில் தேர்ச்சி

(3) 6 ஆண்டுகள் -- இடைநிலைப் பள்ளிப்படிப்பில் தேர்ச்சி

(c) அவ்வப்போது இது தொடர்பான விதிகளின்படி தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித்தேர்வு முடிவின் அடிப்படையில் பணியமர்த்தல், அவ்வாறு பணியமர்த்தப்பட்ட விண்ணப்பதாரர் :-

(i) பத்தொன்பது வயதிற்கு குறையாமலும் மற்றும் இருபத்தியெட்டு வயதிற்கு மிகாமலும் தேர்வாணையத்தால் கூறப்படும் நாளில் இருத்தல் வேண்டும்.

வரம்புரையாக :- பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரகளைப் பொறுத்தவரை அதிகபட்ச வயது வரம்பு (முப்பத்தோரு ஆண்டுகள்) தளர்த்தப்படலாம்.

வரம்புரையாக :- 5 ஆண்டுக்குக் குறையாத காலம் ஆயுதப்படைகளில் தொடர்ந்து பணியாற்றிய முன்னாள் படைவீரர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதிவரை, ஆயுதப்படைகளில் அவரது தொடர்ச்சியான பணிக்காலத்திற்கு மேல் 2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்தை அவரது வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படலாம்.

(ii) அரசால் விளம்புகை செய்யப்பட்ட கல்வித்தகுதிகளில் ஏதேனும் பட்டப்படிப்பு அல்லது அதற்கு நிகரான கல்வித்தகுதி;

(iii) குறைந்தபட்ச உடல் தகுதிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும், அதாவது :-

	ஆண்
(i) உயரம் --	குறைந்தபட்சம் 1165 செ.மீ.

(ii) மார்பு -- 79 செ.மீ. மற்றும் குறைந்தபட்ச மார்பு விரிவு 5 செ.மீ.

பெண்

உயரம் -- 1157 செ.மீ.

விதி 4 : வரையறுக்கப்பட்ட துறைத்தேர்வின் அடிப்படையில் காவல்துறை ஆய்வாளர் பணியிடத்திற்கு நியமனம் அல்லது துறைத்தேர்வு 25:25:50 என்ற விகிதத்தில் செய்யப்படவேண்டும்.

விதி 5 : இந்த விதிகளில் கூறப்பட்ட எதுவும் எவ்வாறாயினும், அரசின் கருத்தில், பணி நிலை, "அவ்விதம் தேவைப்படுமானால், அரசு ம.பொ.தே.கு-வின் முன்கூட்டிய ஆலோசனையுடன், வரையறுக்கப்பட்ட துறைத்தேர்வு அல்லது நியமன அடிப்படையில் பதவி உயர்வு தேர்வு செய்ய, நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட வீதத்தை தளர்த்தி துணை ஆய்வாளர் பணியிடத்திற்கு நியமனம் செய்யலாம்."

4. 12.12.2017-இல் அறிவிக்கப்பட்ட திருத்தப்பட்ட இறுதி முடிவின் அடிப்படையில் ம.பொ.தே.கு, 828 நபர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்துள்ளது, அவற்றில் பொதுப்பிரிவில் 642 பேர், 253 மதிப்பெண்கள் அல்லது அதற்குமேல்

பெற்றவர்கள்: ஒதுக்கீடு செய்யப்பட்ட பல பிரிவுகளில் 182 பேர் 230 மதிப்பெண்கள் அல்லது அதற்கு மேல் பெற்றவர்கள் ஆவர்.

5. வ.து.போ.தே -2016-இல் 230 மதிப்பெண்களுக்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற 636 கூடுதல் விண்ணப்பதாரர்களை நியமிக்க அமைச்சகம் கொள்கை முடிவினை எடுத்துள்ளதாக மகாராஷ்டிரா அரசின் உள்துறை அரசு தீர்மானம் எண். காவல்-1818/கோப்பு 355/காவல் 5 ஏ நாள் 22.04.2019-இல் அறிவித்தது.

6. காவல்துறை துணை ஆய்வாளர் பதவி நியமன நடவடிக்கையின் ஒரு பகுதியாக நாசிக்கில் உள்ள மகாராஷ்டிரா காவல் பயிற்சி நிலையத்திற்கு பயிற்சி பெரும் பொருட்டு 636 விண்ணப்பதாரர்களை, மருத்துவ ஆய்விற்காகவும்,மற்ற பிற நடைமுறைகளை நடத்துவதற்காகவும் 11.06.2019 அன்று காவல்துறை தலைமை இயக்குநர் உத்தரவு பிறப்பித்தார்.

7. அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 320-ன்படி, மாநிலத்திலுள்ள பல்வேறு பணியிடங்களுக்கு நியமிக்க ம.பொ.ப.தே-க்கு அதிகாரம் உள்ளது எனக்கூறி மகாராஷ்டிரா அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்கு (மேல்முறையீடு மற்றும் பாதுகாப்பு) ம.பொ.ப.தே துனைச் செயலாளர் 11.07.2019 நாளிட்ட கடிதத்தினை அனுப்பினார். வகுப்பு III பணியிடமாக இருக்கும் காவல்துறை ஆய்வாளர் பணியிடம் காவல்துறை துணை ஆய்வாளர் (பணி நியமன) விதிகள், 1995-ன்படி, பூர்த்தி செய்யப்படவேண்டியது அவசியமாகும். அரசால் அதன் அலுவலக வலைத்தளத்தில்

அறிவிக்கப்பட்ட 636 நபர்களுக்கான கூடுதல் பட்டியல் ம.பொ.ப.தே-த்தை கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்டுள்ளது. அது கடுமையான முறைகேடு மற்றும் தேர்வாணையத்தின் செயல்பாட்டிற்கு தடையாகும்.

8. மேற்சொன்ன, பின்புலத்தில், 22.04.2019 நாளிட்ட கொள்கை முடிவு அடங்கிய அ.தீ-ஐ எதிர்த்து பல மு.வி-க்கள் விண்ணப்பதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது அவர்களது பதவி உயர்வு விஷயங்களை பாதிக்கும் என்பதால், எதிர்ப்புக்குள்ளான அ.தீ-ஆல் பாதிக்கப்பட்ட, பணிபுரிந்து வரும் காவலர்களான பணியிலுள்ள விண்ணப்பதாரர்களின் குழுவால் தற்போதைய மு.வி.எண்.722/2019 தாக்கல் செய்யப்பட்டது.

காவல்துறையில் துணை ஆய்வாளர் பதவிக்கு நியமிக்கும்படி கூடுதல் 636 விண்ணப்பதாரர்களுக்கு உத்தரவிட்டது பணி நியமன விதிகளுக்கு எதிரானது மற்றும் வரையறுக்கப்பட்ட துறைத்தேர்வு மூலம் நியமனத்திற்கான விகிதத்தினை கட்டாயமாக சிதைத்து விடும் என்ற காரணத்தால் மற்றவற்றிற்கிடையில் மனுதாரர்கள் 22.04.2019 நாளிட்ட அ.தீ-ஐ எதிர்த்துள்ளனர்.

உள்துறை தேர்வு மூலம் பதவி உயர்விற்கு 25 சதவீத ஒதுக்கீடானது, காவல்துறை துணை ஆய்வாளர் பணி நியமன விதிகள், 1995 விதி 4-இல் வகை செய்யப்பட்டுள்ளது. 636 கூடுதல் விண்ணப்பதாரர்களின் நியமனம் விதி 4-ன்படி நிர்ணயிக்கப்பட்ட 25 சதவீத ஒதுக்கீட்டினை சிதைக்கக் கூடிய விளைவை

ஏற்படுத்தும் மற்றும் வ.து.போ.தே-2016-இல் தோல்வியுற்றவர் அல்லது வயது, அனுபவம் மற்றும் கல்வித்தகுதி காரணமாக தகுதியற்றவர் ஆகியோரது எதிர்கால பதவி உயர்வுகளை நீக்கும். இனிவரும் காலத்தில் மனுதாரர்களின் பதவி உயர்வு வாய்ப்பினை மறுப்பது, இந்திய அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 14 மற்றும் 16-ஐ மீறுவதாக அமையும்.

அரசு தீர்மானத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலில் 636 கூடுதல் விண்ணப்பதாரர்களைப் பொறுத்தவரை தற்போதுள்ள நிலையே தொடர மகாராஷ்டிரா நிர்வாகத் தீர்ப்பாயம் தனது 18.10.2019 நாளிட்ட இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளது. தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு மு.வி.எண்.445/2019-இல் பிறப்பித்த 01.08.2019 நாளிட்ட முந்தைய உத்தரவின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

9. 18.10.2019 நாளிட்ட தற்போதைய நிலை என்ற இடைக்கால உத்தரவை நீக்க, இங்குள்ள 5 மற்றும் 6-ஆம் எதிர்மனுதாரர்கள் பல்வகை மனு எண்.545/2019-ஐ தாக்கல் செய்துள்ளனர், அதில், 22.04.2019 நாளிட்ட அ.தீ-ஐ நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடும்படி மாநில அரசுக்கு வேண்டுரைக்கப்பட்டது.

10. மனுதாரர்களில் இரு நபர்கள் வ.து.போ.தே. எழுதி ஆனால் தோல்வியுற்றுள்ளனர்; ஆனால் பிற மனுதாரர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை என்ற காரணத்தினால் 18.10.2019 நாளிட்ட இடைக்கால உத்தரவை மகாராஷ்டிரா

நிர்வாகத் தீர்ப்பாயம் 30.11.2019 நாளிட்ட உத்தரவில் நீக்கறவு செய்தது. எதிர்ப்புக்குள்ளான அ.தீ-ன்கீழ் நியமனம் செய்யப்பட உத்தரவிடப்பட்ட 636 கூடுதல் விண்ணப்பதாரர்களையும் சேர்க்க மனுதாரர்கள் தவறிவிட்டனர் என்றும், அவர்கள் மு.வி.-இல் சேர்க்கப்படவேண்டிய அவசியமான நபர்கள் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நீ.பே.மனு 3555/2019, நிவ்ரதி வெங்கட்ராவ் கீத்தே -எதிர்- மகாராஷ்டிரா மாநிலம் என்ற வழக்கில், பம்பாய் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை சார்ந்து நின்றது, அதில் 22.04.2019 நாளிட்ட அ.தீ. எதிர்க்கப்பட்டது. தேர்வு நடைமுறைகள் தொடரலாம், ஆனால் அவை நீ.பே. மனுவின் முடிவிற்கு உட்பட்டிருக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

11. 30.11.2019 நாளிட்ட உத்தரவால் மனக்குறையுற்ற, அசல் விண்ணப்பதாரர்கள்/இங்குள்ள மனுதாரர்கள், அவுரங்காபாத்திலுள்ள பம்பாய் உயர்நீதிமன்ற கிளையில் நீதிப்பேராணை மனு எண்.15045/2019-ஐ தாக்கல் செய்தனர்.

நியமனம் செய்ய உத்தரவிடப்பட்ட 636 கூடுதல் விண்ணப்பதாரர்களைப் பொறுத்து தற்போதைய நிலையை நிலைக்கும்படியான வேண்டுரையையும், நீ.பே. மனுவினையும் பம்பாய் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. தீர்ப்பாயம் முன்பு தீர்வுக்காக மு.வி. நிலுவையிலுள்ளதால், விதி 5-ன் வகையங்களின்படி, அசாதாரண சூழ்நிலையில் 22.04.2019 நாளிட்ட அ.தீ. வழங்கப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்க

உயர்நீதிமன்றம் தவறியுள்ளது. இருப்பினும், கூடுதலான 636 விண்ணப்பதாரர்களையும் 9 மாதங்கள் பயிற்சிக்கு அனுப்புமாறு மாநில அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது; மற்றும், கூடுதல் விண்ணப்பதாரர்களுக்கு ஆதரவாக பணிநியமன/நியமன உத்தரவுகள் வழங்கப்படுவதற்கு முன்பு மு.வி-ஐ தீர்மானிக்கும் பொருட்டு நிலுவையிலுள்ள அந்த மு.வி.-ஐ தீர்வு செய்யும்படி தீர்ப்பாயத்திற்கு உத்தரவிட்டது.

12. மேல்முறையீட்டாளர்களுக்கான மூத்த வழக்குரைஞர் திரு. வினய் நவாரே, எதிர்மனுதாரரான மகாராஷ்டிரா அரசு சார்பாக பதிவில் உள்ள வழக்குரைஞர் திரு. சச்சின் பாட்டீல், முன்னெச்சரிக்கை மனுதாரர்களான திரு. ரவீந்திர கேஷவ்ராவ் அட்சூர் மற்றும் இடையீட்டாளர்கள் சார்பாக மூத்த வழக்குரைஞர் ஆர். பசந்த் மற்றும் மூத்த வழக்குரைஞர் திரு. எம்.என்.ராவ் ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டோம். தரப்பினர்களின் ஒப்புதலுடன் அனுமதிக்கும் நிலையிலேயே நாங்கள் மேல்முறையீட்டினை முடிவு செய்கிறோம்.

13. குடிமைப்பணிகள் மற்றும் குடிமைப்பணியிடங்கள் தொடர்புடைய அனைத்து விடயங்களிலும் இந்திய குடிமைப் பணிகள் தேர்வாணையம் மற்றும் மாநில குடிமைப் பணிகள் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கும்படி, இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 320 (3) (a) வகை செய்கிறது.

தற்போதைய வழக்கில், ம.பொ.ப.தே மாநில அரசிற்கு வழங்கிய 11.07.2019 தேதியிடப்பட்ட கடிதத்திலிருந்து கலந்தாலோசனை ஏதுமின்றி இந்தப் பணி நியமனங்கள் மாநில அரசால் தன்னிச்சையாக செய்யப்பட்ட முடிவை வெளிப்படையாக நிராகரித்தது என்பது தெளிவாகிறது என்றும், மகாராஷ்டிரா மாநில அரசு, ம.பொ.ப.தே-ஐ முன் அனுமதியின்றியும், கலந்தாலோசிக்காமலும் 22.04.2019 நாளிட்ட எதிர்ப்புக்குள்ளான அ.தீ-ஐ வழங்கியுள்ளது என்பதையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

14. இந்த விதிகளில் அடங்கியுள்ள எதுவும், அரசின் கருத்தில், பணி நெருக்கடி ஏற்பட்டால், பதவி உயர்வு மூலம் நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரம், வ.து.தேர்வு அல்லது நியமன அடிப்படையில் தேர்வாணையத்துடன் முன் ஆலோசனை செய்து தளர்வு அளிக்கப்படலாம் என காவல்துறை துணை ஆய்வாளர் (பணி நியமனம்) விதிகள், 1995 வகை செய்கிறது.

வழக்கத்திற்கு மாறாக மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மட்டுமே செய்யக்கூடிய, விதி 5-ன்கீழ் அதிகாரத்தை செலுத்த உறுதியளிக்கின்ற அசாதாரண சூழ்நிலை ஏதும் இருந்ததா என்பதை தீர்ப்பாயம் முன்பு, அரசு நிறுவ வேண்டியது அவசியமாகிறது.

15. 27.06.2016 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் வ.போ.து.தே-க்கள் 20160-க்காக அறிவிக்கை செய்யப்பட்ட இருமடங்கு எண்ணிக்கை பதவிகளை நிரப்ப எதிர்ப்புக்குள்ளான அ.தீ கோருகிறது. அறிவிக்கை செய்யப்பட்ட காலிப்பணியிடங்களை விட அதிகமாக விண்ணப்பதாரர்களை தேர்வு செய்வது என்பது இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறுகள் 14 மற்றும் 16 (1)-ஐ மீறுவதாக இருக்கும் என்பதால், விளம்பரப்படுத்தப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்ட பணியிடங்களை விட கூடுதலாக அதிகார அமைப்பு நிரப்பக்கூடாது என்பது பணிச்சட்டவியலில் நன்கு அறுதியிடப்பட்டதாகும்.

16. மனுதாரர்களின் இருவர் தேர்வில் கலந்து கொண்டு ஆனால் தகுதிபெறத் தவறிவிட்டனர் என்ற காரணத்தினால் 18.10.2019 நாளிட்ட தற்போதைய நிலையே என்ற உத்தரவை தீர்ப்பாயம் நீக்கறவு செய்து விட்டது.

மனுதாரர்களின் பதவி உயர்வு வாய்ப்புகள் கடுமையாக பாதிக்கப்படுவதால், விண்ணப்பதாரர்களுக்கு மேல் 636 கூடுதல் நபர்களின் தொகுப்பு காவல்துறை துணை ஆய்வாளர்களாக நியமிக்கப்படக்கூடும் என்பதால், இடைக்கால உத்தரவை நீக்கறவு செய்வதற்கான காரணம் நியாயமானதாக இருக்க முடியாது.

17. 22.04.2019 நாளிட்ட அ.தீ-ஐ மனுதாரர்கள் எதிர்க்கவில்லை என உத்தரவின் பத்தி 17-இல், கூறப்பட்ட பிற காரணத்தினாலும், தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவை நீக்கறவு செய்துள்ளது.

பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ள மு.வி-ன் வேண்டுரைகள் தவறானது என்பது தெளிவாகிறது :-

"(A) எந்த மீறலும் இன்றி, 1995 காவல்துறை துணை ஆய்வாளர் பணி நியமன விதிகளின்படி நியமனம் செய்திட எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட்டு மு.வி. அனுமதிக்கப்படவேண்டும்.

(B) 22.04.2019 நாளிட்ட அரசு தீர்மானத்தின்படி 636 விண்ணப்பதாரர்களுக்கு மேல் பதவி உயர்வு மூலம் செய்யப்பட்ட நியமனத்தை, நியமன விதிகளுக்கு மாறுபட்டுள்ளது என்பதாலும், அது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின், முன்தீர்ப்பினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதாலும், அதை செல்லாததாக்கவும் மற்றும் நீக்கறவு செய்யவும் கோரப்படுகிறது.

(C) இந்த மனுவின் விசாரணை மற்றும் இறுதி முடிவு நிலுவையிலிருக்கும் போது எதிர்ப்புக்குள்ளான அரசு தீர்மானம் நாள் 22.04.2019-ன் தொடர்ச்சியாக மேல் நடவடிக்கை எடுக்க 1 முதல் 3-ஆம் எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடலாம்.

(D) இந்த மனுவின் விசாரணை மற்றும் இறுதி முடிவு நிலுவையிலிருக்கும்போது, 22.04.2019 நாளிட்ட எதிர்ப்புக்குள்ளான அரசு தீர்மானத்தின் கீழ் பதவி உயர்வு மூலம் நியமிக்கப்பட உள்ள 636 விண்ணப்பதாரர்களைப் பொறுத்து தற்போதைய நிலையை தக்கவைக்க 1-ஆம் எதிர்மனுதாரருக்கு உத்தரவிடலாம்.

(E) மாண்புமிகு தீர்ப்பாயம் பொருத்தமானது எனக் கருதும் வகையில், மனுதாரர்களுக்கு உரியதான தகைமை முறை மற்றும் பொருத்தமான எந்த நிவாரணமும் அவர்களுக்கு சாதகமாக வழங்கலாம்."

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

மேற்சொன்னதை கருத்தில் கொண்டு, 18.10.2019 நாளிட்ட உத்தரவில் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீக்கறவு செய்ய மேற்படி கருத்துரைகள் காரணமாகாது.

18. முதன்மை ஆயம் முன்பு தாக்கல் செய்யப்பட்ட மு.வி.455/2019 உட்பட, 22.04.2019 நாளிட்ட மேற்சொன்ன அ.தீ-ஐ எதிர்த்த அதுபோன்ற மு.வி-களில், அவ்வழக்குகளின் விண்ணப்பதாரர்கள், மாநில அரசுடனான தங்களது கோரிக்கையை தொடர விரும்புவதால், அவர்களது உரிய வழக்குகளை திரும்பப்

பெற்றனர் என்ற மூன்றாவது காரணத்தின்பேரில், தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவை நீக்கறவு செய்துள்ளது.

மற்ற தரப்பினர்கள் தங்களது சொந்த காரணங்களுக்காக மு.வி-களை திரும்பப் பெற்றனர் என்பதால் மட்டுமே தற்போதைய நிலை என்ற உத்தரவை நீக்கறவு செய்வதற்கு நியாயமான காரணமாக அமையாது.

19. தீர்ப்பாயத்தின் முன் நடவடிக்கைகள் நிலுவையிலிருக்கும்போது, கூடுதல் பட்டியலில் உள்ள 636 விண்ணப்பதாரர்களை 9 மாத கால பயிற்சிக்கு அனுப்ப மாநில அரசுக்கு உயர்நீதிமன்றம் இந்த நீதிப்பேராணை மனுவில் உத்தரவிட்டுள்ளதை நாங்கள் காண்கிறோம்.

எதிர்ப்புரையின் வழக்குப் பொருளாக உள்ள எதிர்ப்புக்குள்ளான அரசு தீர்மானம் எண்.காவல் 1818/கோப்பு 355.காவல் 5 ஏ நாள் 22.04.2019-ஆல் மனக்குறையுற்ற தற்போதைய மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில் அத்தகைய உத்தரவை பிறப்பித்திருக்கக்கூடாது என நாங்கள் கருதுகிறோம்.

20. மேற்சொன்ன விவாதத்தை கருத்தில் கொண்டு, மகாராஷ்டிரா நிர்வாகத் தீர்ப்பாயம் முன்பு நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும்போது அரசு தீர்மானம் எண்.காவல் 1818/கோப்பு 355.காவல் 5 ஏ நாள் 22.04.2019-க்கு தடையை நீட்டிக்கும்படி உத்தரவிட்டு, நாங்கள் இந்த உரிமையியல் மேல்முறையீட்டினை அனுமதிக்கிறோம்.

18.10.2019 நாளிட்ட இடைக்கால உத்தரவை மகாராஷ்டிரா நிர்வாக தீர்ப்பாயம் நீக்கறவு செய்து, 30.11.2019 நாளிட்ட உத்தரவையும் மற்றும் பம்பாய் உயர்நீதிமன்றத்தால் நீதிப்பேராணை மனு எண்.15045/2019-இல் 06.03.2020-இல் பிறப்பித்த உத்தரவினையும் நாங்கள் நீக்கறவு செய்கிறோம்.

21. இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 6 மாதகாலத்திற்குள் நிலுவையிலுள்ள மு.வி.-இல் முடிவெடுக்குமாறு நாக்பூரிலுள்ள மகாராஷ்டிரா நிர்வாகத் தீர்ப்பாயத்திற்கு நாங்கள் உத்தரவிடுகிறோம். இந்த நடவடிக்கையில் முன்னிலையாகவும் மற்றும் பங்கேற்க வசதியாகவும் மாநில அரசு வழியாக நிலுவையிலுள்ள மு.வி. குறித்து கூடுதல் 636 விண்ணப்பதாரர்களுக்கும் அறிவிப்பு அனுப்புவதை தீர்ப்பாயம் உறுதி செய்யவேண்டும். எதிர்ப்புக்குள்ளான அரசு தீர்மானம் எண்.காவல் 1818/கோப்பு 355/காவல் 5 ஏ-ஐ எதிர்க்கின்ற நிலுவையிலுள்ள மு.வி-க்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, இந்த வழக்குகளில் பொதுவான தீர்ப்புரை பிறப்பிக்க தீர்ப்பாயத்திற்கு மேலும் உத்தரவிடப்படுகிறது.

செலவுகள் குறித்து உத்தரவேதும் இல்லை.

விண்ணப்பங்கள் ஏதேனும் நிலுவையிலிருப்பின், அவை தீர்வு செய்யப்படுகின்றன.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".